‘உங்களைத் தேடி உங்கள் ஊரில்...’ என்ற புதிய திட்டம் அடுத்த மாதம் துவக்கம்

ஒவ்வொரு மாதமும் மக்கள் குறை கேட்க கிராமங்களில் கலெக்டர்கள் தங்க வேண்டும்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, நவ.24–

‘உங்களை தேடி உங்கள் ஊரில்...’ என்ற புதிய திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்படி ஒவ்வொரு மாதமும் மக்கள் குறை கேட்க கிராமங்களில் கலெக்டர்கள் தங்க வேண்டும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டு உள்ளார்.

தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அரசால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள் மக்களைச் சரியாக சென்று அடைகின்றதா? பல்வேறு துறைகளால் வழங்கப்படும் சேவைகள் மக்களுக்கு முறையாக கிடைக்கின்றதா? என்பதை முதலமைச்சரே களத்திற்கு நேரடியாக சென்று ஆய்வில் ஈடுபட்டு, அரசு எந்திரத்தை முடுக்கி விட்டு, கள அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டத்தையும் நடத்தி உரிய அறிவுரைகளை வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட திட்டம் தான் களத்தில் முதல்வர் திட்டம்.

மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடம் இருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய் என்று சொன்ன அண்ணாவின் கனவை நனவாக்கும் திட்டம் இது.

மக்களுக்காக செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள் மக்களின் நலனையும், முன்னேற்றத்தையும் மையமாக கொண்டு தீட்டப்படுகின்றன, செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் பலன் மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டியதும், மக்கள் அரசு நலத்திட்டங்களின் முழுப்பலனையும் அடைவதில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைய வேண்டியதும் அரசு எந்திரத்தின் முதன்மையான பணி ஆகும்.

மக்களின் அன்புக்கு உரியவர்கள் கலெக்டர்கள்

அரசு எந்திரமானது கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் மக்களைத் தேடிச் சென்று பணியாற்ற வேண்டும். மக்களையும், அரசையும் இணைக்கும் பாலமாக செயல்பட்டு வருபவர்கள் மாவட்ட கலெக்டர்கள். ஒவ்வொரு கிராமத்தில் வசிக்கும் மக்களும் தங்கள் கிராம முன்னேற்றத்துக்கும், அரசு தொடர்பாக தனக்கிருக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வை நாடிச் செல்லும் நபர் மாவட்ட கலெக்டர் தான். தங்கள் அருகில் இருக்கும் பிற அதிகாரிகள் அன்புக்குரியவராக இருப்பினும், மக்களின் மகத்தான அன்புக்கும், ஆதரவுக்கும், நம்பிக்கைக்கும் உரியவர்களாக மாவட்ட கலெக்டர்களை தான் பார்க்கிறார்கள். மாவட்ட கலெக்டர்களிடம் திங்கட்கிழமை தோறும் வந்து மனு அளிக்கிறார்கள்.

மாவட்ட கலெக்டர் பதவியின் கம்பீரம் மக்களைக் கலவரம் அடையச் செய்வதில்லை, மாறாக கவர்ந்திழுக்கிறது. உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தின்படி ஒவ்வொரு மாவட்ட கலெக்டரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்டம் அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளேன்.

இந்த திட்டம், களத்தில் முதல்வர் திட்டத்தின் அடுத்தகட்டம் எனலாம். மக்களிடம் செல் என்று சொன்ன அண்ணாவின் கனவுத்திட்டம் என்றும் சொல்லலாம். உங்களை நாடி, உங்களை குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு எந்திரம் வருகிறது. நானும், அரசு எந்திரமும் களத்திற்கு வருகிறோம். கவனமுடன் உங்கள் குறை கேட்போம். களத்திலேயே தீர்வு காண்போம். மக்களின் கவலையைப் போக்குவோம். மகத்தான தமிழ்நாட்டை உருவாக்குவோம்.

உங்களை தேடி, உங்கள் ஊரில் என்ற இந்த புதிய திட்டம் வரும் டிசம்பர் மாதம் தொடங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

டிசம்பர் 1–ந்தேதி முதல் புதிய நடைமுறை அறிமுகம்: அடுக்குமாடி குடியிருப்பு விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை குறைப்பு

சென்னை, நவ.24–

அடுக்குமாடி குடியிருப்பு விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை குறைக்கப் பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறை டிசம்பர் 1ந்தேதி முதல் அமலுக்கு வருவதாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி தெரிவித்துள்ளார்.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் ஜோதி நிர்மலாசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் அடுக்குமாடி குடியிருப்புகள் குறித்த ஆவணங்கள் பதிவுக்கு வரும்போது, இரண்டு ஆவணங்களாக பதிவு செய்யும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. அதாவது அடிநிலம் பொருத்து பிரிபடாத பாகத்திற்கு கிரையமாக ஓர் ஆவணமாகவும், கட்டிடப் பகுதியைப் பொருத்து கட்டுமான உடன்படிக்கையாக ஓர் ஆவணமாகவும் இரண்டு ஆவணங்களாக பதிவு செய்யப்படுகின்றன.

ஆனால் இந்த பரிவர்த்தனை இரண்டு வெவ்வேறு ஆவணங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. விற்பனை ஆவணத்திற்கு 7 சதவீத முத்திரைத் தீர்வை மற்றும் 2 சதவீத பதிவுக் கட்டணமும் கட்டுமான உடன்படிக்கை ஆவணங் களைப் பொருத்து 1 சதவீத முத்திரைத் தீர்வை மற்றும் 3 சதவீத பதிவுக்கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டைத் தவிர பிற அனைத்து மாநிலங்களிலும் அடுக்குமாடி குடியிருப்புகளைப் பொறுத்து கட்டிடம் மற்றும் அடிநிலம் சேர்ந்த ஒரு கூட்டு மதிப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பானது மொத்த கட்டிட பரப்பைப் பொறுத்து கணக்கிடப்பட்டு அதனடிப்படையில் விற்பனை ஆவணமாகவே பதிவு செய்யப்படுகிறது.

மற்ற மாநிலங்களில் நிலவும் இம்முறையை தமிழ்நாட்டிலும் பின்பற்றலாம் என முடிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் இதுகுறித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதில் பங்கேற்ற ரியல் எஸ்டேட் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆவணத்திற்கான முத்திரைத் தீர்வை குறைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

அடுக்குமாடி குடியிருப்புகளைப் பதியும்போது இனி பிரிபடாத பாக நிலத்திற்கு ஒரு தனி ஆவணம் கட்டிடத்திற்கு ஒரு தனி ஆவணம் என இரு ஆவணங்களாகப் பதியப்படும் நிலையை மாற்றி கட்டிடம் மற்றும் அடிநிலம் சேர்ந்த கூட்டு மதிப்பின் அடிப்படையில் ஒரே விற்பனை ஆவணமாகப் பதிவு செய்யும் நடைமுறையை அமல்படுத்தவும் குறிப்பிட்ட மதிப்பு வரையிலான புதிய குடியிருப்புகள் பதிவிற்கான முத்திரைத் தீர்வையைக் குறைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

மதிப்பு ரூ.50 லட்சம் வரையுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான முத்திரைத் தீர்வையை தற்போது உள்ள 7 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாக குறைக்கலாம் என்றும், ரூ.50 லட்சம் முதல் ரூ.3 கோடி வரையிலான அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான முத்திரைத் தீர்வையை 7 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கலாம் என்றும் அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வளவு?

இதனால் ரூ.50 லட்சம் வரையிலான மதிப்புடைய புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்குவோர் விற்பனைக் கிரைய ஆவணம் பதியும்போது முத்திரைத் தீர்வை 4 சதவீதம் மற்றும் பதிவுக் கட்டணம் 2 சதவீதமாக மொத்தம் 6 சதவீதம் செலுத்தினால் போதுமானது.

ரூ.50 லட்சம் முதல் ரூ.3 கோடி வரையிலான மதிப்புடைய அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்குவோர் முத்திரைத் தீர்வை 5 சதவீதம் மற்றும் பதிவுக் கட்டணம் 2 சதவீதம் என மொத்தம் 7 சதவீதம் செலுத்தினால் போதுமானது.

இந்த சலுகையானது பிரிபடாத பாக மனையுடன் பதியப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு மட்டுமே வழங்கப்படும். மேலும் அடுக்குமாடி குடியிருப்புகளின் முதல் விற்பனைக்கு மட்டுமே இது பொருந்தும். மறு விற்பனைக்கு பொருந்தாது.

இனிமேல் அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்குவோர் கட்டுமான ஒப்பந்த ஆவணமாக இல்லாமல் விற்பனை கிரைய ஆவணமாகப் பதிந்து தங்கள் குடியிருப்பை உடைமையாக்கிக் கொள்ளலாம்.

டிசம்பர் 1ந்தேதி முதல்...

அடுக்குமாடி குடியிருப்புகளை அடிநிலம் சேர்ந்த கூட்டு மதிப்பின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட முத்திரைத் தீர்வை சலுகையுடன் பதியும் இப்புதிய நடைமுறை டிசம்பர் 1ந்தேதி முதல் அமலுக்கு வருகிறது.

ஏற்கனவே கட்டுமான ஒப்பந்த ஆவணமாகப் பதியப்பட்டிருக்கும் குடியிருப்புகளை மறு விற்பனை செய்வது தற்போது பதிவுத்துறையால் அனுமதிக்கப்பட்டு வரும் நிலையில், இந்த அனுமதியானது, டிசம்பர் 1ந்தேதிக்கு பின்னர் பதியப்படும் கட்டுமான ஒப்பந்த ஆவணங்களைப் பொறுத்து விலக்கிக் கொள்ளப்படும்.

கூட்டு மதிப்பின் அடிப்படையில் அடுக்குமாடி குடியிருப்பு விற்பனை ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை சலுகை வழங்கும் அரசின் இந்த நடவடிக்கையால் வங்கியில் கடன் பெற்று புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை வாங்கும் நடுத்தர மக்கள் மிகவும் பயன் பெறுவார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

‘டெட்ரா பேக்’ மது விற்பனை குறித்து விரைவில் அறிவிப்பு: அமைச்சர் முத்துசாமி தகவல்

ஈரோடு, நவ.24–

‘டெட்ரா பேக்’ மது விற்பனை குறித்து விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் என்று அமைச்சர் முத்துசாமி கூறினார்.

ஈரோட்டுக்கு நேற்று வந்த முத்தமிழ்த்தேருக்கு வரவேற்பு அளித்த தமிழ்நாடு மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தேரில் உள்ள கருணாநிதியின் சிலைக்கு மாலை அணிவித்தார். அதன்பிறகு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தீபாவளி போன்ற பண்டிகையின்போது அனைத்து பொருட்களின் விற்பனையும் அதிகமாக காணப்படும். அதற்காக திட்டமிட்டு மது விற்பனை நடத்தப்படவில்லை. மது விற்பனையை தடுப்பதும் கடினம். மகிழ்ச்சிக்காக பலர் மது குடிக்கின்றனர். இருந்தாலும், மது குடிப்பதை குறைக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் நோக்கமாகும். இதுதொடர்பாக ஒவ்வொரு மாவட்டங்களிலும் குழு வைத்து ‘கவுன்சிலிங்’ கொடுத்து வருகிறோம். எனவே மது விற்பனையை அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. மது குடிப்பதை தவிர்க்க வேண்டும் என்பதே எங்களது வேண்டுகோளாகும்.

‘டெட்ரா பேக்’ மது விற்பனை நடைமுறை மற்ற மாநிலங்களில் உள்ளது. அதில் சில நன்மைகளும் உள்ளன. பாட்டில் பயன்பாடு குறைவதன் மூலமாக விவசாயிகளுக்கான பிரச்சினை தீரும். அதுதொடர்பான ஆய்வு அறிக்கை பெறப்பட்டு உள்ளது.

எனவே தமிழ்நாட்டில் ‘டெட்ரா பேக்’ மது விற்பனை தொடர்பாக விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும்.

தமிழகத்தில் மது விற்பனை படிப்படியாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருந்தார். அதன்படி 500 மதுக்கடைகள் மூடப்பட்டு உள்ளன. ஒரே நாளில் மது குடிக்கும் பழக்கத்தை மாற்றிவிட முடியாது. பல நடவடிக்கைகளை புதிதாக செய்து வருகிறோம். அது வெற்றி பெறும்போது பிரச்சினை முடிவுக்கு வரும்.

விதிமுறையை மீறி மது விற்பனை செய்யப்படுவதில்லை. அதுதொடர்பான புகார் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அமைச்சர் சு.முத்துசாமி கூறினார்.

‘டெட்ரா பேக்’ மது என்றால் என்ன?

‘டெட்ரா பேக்’ மது என்பது பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படும் மதுபானங்கள் ஆகும். அதாவது பாட்டில் பயன்பாட்டுக்கு பதில் குளிர்பானங்கள் அட்டை பெட்டிகளில் விற்பனை செய்வது போல மதுபானங்கள் சிறிய அட்டை பெட்டிகளில் அடைத்து விற்பனை செய்வதே ஆகும்.

சென்னை ஐகோர்ட்டில் 2 புதிய நீதிபதிகள் பதவி ஏற்றனர்

சென்னை, நவ.24–

சென்னை ஐகோர்ட்டில் 2 புதிய நீதிபதிகள் நேற்று பதவி ஏற்றுக்கொண்டனர். அதில், அலகாபாத் ஐகோர்ட்டில் இருந்து வந்துள்ள நீதிபதி விவேக்குமார் சிங், தமிழை கற்பதுதான் தனது முதல் திட்டம் என்று கூறினார்.

அலகாபாத் ஐகோர்ட்டில் நீதிபதியாக பணியாற்றிய விவேக்குமார் சிங், தெலுங்கானா ஐகோர்ட்டில் நீதிபதியாக பணியாற்றிய எம். சுதீர்குமார் ஆகியோரை சென்னை ஐகோர்ட்டுக்கு இடமாற்றம் செய்து ஜனாதிபதி அண்மையில் உத்தரவு பிறப்பித்தார். இதன்படி, இந்த 2 நீதிபதிகளும் சென்னை ஐகோர்ட்டில் நீதிபதிகளாக நேற்று மாலை பதவி ஏற்று கொண்டனர். இவர்களுக்கு தலைமை நீதிபதி எஸ்.

வி.கங்காபுர்வாலா பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

புதிய நீதிபதிகள் இருவரையும் வரவேற்று அட்வகேட் ஜெனரல் ஆர். சண்முகசுந்தரம் பேசினார்.

இவரைத் தொடர்ந்து, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், சென்னை ஐகோர்ட் வக்கீல்கள் சங்கத்தலைவர் ஜி.மோகன கிருஷ்ணன், மெட்ராஸ் பார் அசோசியேஷன் தலைவர் கமல நாதன், பெண் வக்கீல்கள் சங்கத்தின் தலைவி லூயிசால் ரமேஷ், லா அசோசியேஷன் தலைவர் செல்வராஜ் ஆகியோரும் புதிய நீதிபதிகளை வரவேற்று பேசினர்.

இதற்கு நன்றி தெரிவித்து இரு நீதிபதிகள் பேசினர். மாலை வணக்கம் என்று தமிழில் தொடங்கி நீதிபதி விவேக்குமார் சிங் பேசியதாவது:

என்னுடைய முதல் திட்டமே தமிழ்மொழியை கற்கவேண்டும் என்பதுதான். சென்னையில் வந்து இறங்கியதும் என் மனதில் தோன்றிய எண்ணமே அதுதான். ஏன் என்றால், வழக்குத் தொடர்பாக என்னோடு நீங்கள் (வக்கீல்கள்) பேசும்போது, இதயப்பூர்வமான வார்த்தைகளில் பேசவேண்டும். அப்போதுதான் அது தெளிவாக உண்மையாக இருக்கும். அதற்கு நீங்கள் பேசும் தமிழை நான் கற்கவேண்டும். இப்போது தமிழ் குடும்பத்தில் அங்கமாக மாறியுள்ளேன். சென்னை ஐகோர்ட்டில் பணியாற்றுவதை பெருமையாக கருதுகிறேன்.

அலகாபாத்துக்கு வந்து காஞ்சி சங்கராச்சாரியார் என்னை வாழ்த்தினார். இன்று (நேற்று) சாய்பாபா பிறந்தநாள். இறைவனின் ஆசீர்வாதத்துடன் இங்கு நான் பதவி ஏற்கிறேன். சென்னை எனக்கு புதிதல்ல. கடந்த 2006ம் ஆண்டு வழக்கு விசாரணைக்காக இந்த ஐகோர்ட்டில் ஆஜராகியுள்ளேன். நாட்டிலேயே சென்னை ஐகோர்ட்டுதான் தலைசிறந்த ஐகோர்ட். இங்கு நீதிபதிகள், வக்கீல்கள் சட்டங்களை நன்கு கற்றறிந்த திறமையானவர்கள். சுப்ரீம் கோர்ட்டில்கூட தமிழ்நாட்டைச் சேர்ந்த வக்கீல்கள்தான் திறமையாக வாதாடி வழக்குகளில் வெற்றி பெறுவார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதையடுத்து நீதிபதி எம். சுதீர்குமார் பேசும்போது, “சட்ட நடைமுறைகளுக்கு சென்னை ஐகோர்ட்டின் பங்கு அளப்பரியது. இந்த ஐகோர்ட்டில் தீர்ப்புகள் சமூகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. இங்கு பணியாற்றுவதில் பெருமை கொள்கிறேன்” என்று கூறினார்.

தமிழக முன்னாள் கவர்னர் பாத்திமா பீவி மறைவுக்கு மு.க.ஸ்டாலின் இரங்கல்

கொல்லம், நவ.24–

தமிழக முன்னாள் கவர்னர் பாத்திமாபீவி வயது மூப்பு காரணமாக காலமானார். அவரது மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளனர்.

1997–ம் ஆண்டு ஜனவரி 25–ந் தேதி முதல் 2001–ம் ஆண்டு ஜூலை 3–ந் தேதி வரை தமிழக கவர்னராக பதவி வகித்தவர் பாத்திமா பீவி. கேரள மாநிலம் பத்தினம்திட்டாவை சேர்ந்த இவர், தனது சொந்த ஊரிலேயே வசித்து வந்தார். 96 வயதான அவர் உடல்நலக்குறைவு காரணமாக கொல்லத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்று அவர் காலமானார்.

பாத்திமா பீவி மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளர். அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:–

‘தமிழ்நாடு முன்னாள் கவர்னர், சுப்ரீம் கோர்ட்டின் முதல் பெண் நீதிபதி என்ற பெருமைக்குரியவருமான பாத்திமா பீவி மறைந்தார் என்பதை அறிந்து வருந்துகிறேன்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதி, தேசிய மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர், கேரள பிற்படுத்தப்பட்டோர் ஆணையத் தலைவர், தமிழ்நாடு கவர்னர் என பல உயர்பொறுப்புகளில் பணியாற்றியுள்ள பாத்திமா பீவியின் மறைவால் வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறியுள்ளார்.

எடப்பாடி பழனிசாமி

தமிழக முன்னாள் கவர்னர் பாத்திமா பீவி மறைவுக்கு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாடு முன்னாள் கவர்னர் பாத்திமாபீவி உடல்நலக்குறைவால் மரணம் அடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

உச்ச நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட முதல் பெண் நீதிபதி என்ற சிறப்புக்குரிய பாத்திமாபீவி, சட்டப்படிப்பில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தவர். தேசிய மனித உரிமை கமிஷன் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

புரட்சித்தலைவி அம்மாவின் நன்மதிப்பைப் பெற்றவரும், பல்வேறு பதவிகளில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவருமான பாத்திமாபீவியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதிபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்று கூறியுள்ளார்.

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி, புதுச்சேரி கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி, கேரள கவர்னர் ஆரிப் முகமது கான், கேரள முதல்வர் பினராயி விஜயன், சுகாதாரத் துறை மந்திரி வீணா ஜார்ஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா, பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர்.தனபாலன், இந்திய ஹஜ் அசோசியேசன் தலைவர் பிரசிடெண்ட் அபுபக்கர் ஆகியோரும் இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

இறுதிச்சடங்கு

இதற்கிடையே மரணம் அடைந்த பாத்திமா பீவி உடல் கொல்லத்தில் இருந்து அவரது சொந்த ஊரான பத்தனம்திட்டா கொண்டு செல்லப்பட்டது. அங்கு இறுதிச்சடங்கு இன்று பத்தனம்திட்டா டவுன் ஜும்மா மசூதியில் நடைபெறுகிறது.

தமிழகத்தில் உள்ள நியாய விலைக்கடைகள் நாளை இயங்காது

சென்னை, நவ. 24–

தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகள் நாளை (25–ந்தேதி) இயங்காது. தீபாவளி பண்டிகையையொட்டி, விடுமுறையின்றி கடைகள் இயங்கியதால், நியாய விலைக் கடைகளுக்கு நாளை மாற்று விடுப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையையொட்டி கடந்த 3ம் தேதி முதல் 10ம் தேதி வரை தொடா்ச்சியாக விடுமுறையின்றி நியாய விலைக் கடைகள் அனைத்தும் இயங்கின. இதற்கு ஈடாக கடந்த 13ம் தேதி நியாய விலைக் கடைகளுக்கு விடுமுறை விடப்பட்டது. இதேபோன்று நாளையும் விடுமுறை விடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பின்படி, தமிழகத்திலுள்ள நியாய விலைக் கடைகள் நாளை இயங்காது.

நெல்லை மாநகராட்சி தி.மு.க. கவுன்சிலர்கள் 3 பேர் கட்சியில் இருந்து நீக்கம்: துரைமுருகன் நடவடிக்கை

சென்னை, நவ.24

நெல்லை மாநகராட்சியில் கடந்த 21ந்தேதி குறைதீர்ப்பு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில், மேயர் மற்றும் மாநகராட்சி கமிஷனர் வரவில்லை என்று கூறி, ஆளுங்கட்சியான தி.மு.க.வை சேர்ந்த 3 கவுன்சிலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தற்போது, அவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக, தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

நெல்லை மத்திய மாவட்டம் நெல்லை மாநகராட்சி 6வது வார்டு கவுன்சிலர் பவுல்ராஜ், 20 வது வார்டு கவுன்சிலர் மன்சூர், 24வது வார்டு கவுன்சிலர் ரவீந்தர் மற்றும் 7வது வார்டை சேர்ந்த மாநகர தி.மு.க. பிரதிநிதி மணி என்ற சுண்ணாம்பு மணி ஆகியோர் கட்சி கட்டுப்பாட்டை மீறியும், கட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பெயர் மாற்றம்

Given Name: Glastinraj, Sur Name: Rajaiah, பிறந்த தேதி : 22.11.1962, நெ.29, பிரிவெரி ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை - 600 040, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Given Name: GLASTONRAJ, Sur Name: Rajaiah**, என்று அழைக்கப்படுகிறேன்.

Given Name: Glastinraj,
Sur Name: Rajaiah

பெயர் மாற்றம்

நான், P.REVATHI
த/பெ. Padmanabhan
பிறந்த தேதி: 07.03.1965
பிறந்த இடம்: காஞ்சிபுரம் மாவட்டம்,
வசிப்பிட முகவரி: A4 அஸ்வின் காயத்ரி அப்பார்ட்மெண்ட்,
34/15 ஆஞ்சநேயர் கோயில் தெரு,
தாம்பரம் கிழக்கு,
சென்னை - 600 059.
இனி முதற்கொண்டு
REVATHI MANNAR
என்று அழைக்கப்படுவேன்.

P.REVATHI

மாண்புமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றம்4 பொன்னேரி
அசல் வழக்கு எண்622/2023

P. கல்விநாதன், த/பெ பொன்னுசாமி எண்1/59 பெருமாள் கோயில் தெரு அழிஞ்சிவாக்கம் வடகரை அஞ்சல் சென்னை600052

... மனுதாரர்/வாதி

எதிர்

1. N.விஜயகுமார் த/பெ நீலகண்டன்
2. V.புவனேஸ்வரி க/பெ விஜயகுமார்

இருவரின் முகவரி: எண் 52 அண்ணா தெரு மாதவரம் சென்னை.600060

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் 1 மற்றும் இரண்டு

மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் ஆஜராக வேண்டி அவர்களின் வருகைக்காக வரும் 13.12.2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது அன்றைய தினம் மாண்பமை பொன்னேரி நான்காவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் காலை 10:30 மணிக்கு நேரடியாகவோ அல்லது தங்களுக்குரிய வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஒருதலைப் பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்

J.செந்தமிழ் அரசு
R. டில்லி பாபு
A. வீரபாண்டியன்
மனுதாரர்/வாதியின் வழக்கறிஞர்கள்.

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

kotak Kotak Mahindra Bank **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. லேண்ட் மார்க்: சிட்ரான் கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

''பஜாஜ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்'' கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (இனி கேஎம்பிஎல் என்று குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. **திரு. எஸ். ஆனந்தராஜ், திருமதி. ஜி. கலைச்செல்வி, மெசர்ஸ் ரூபினி ஏஜென்சீஸ்** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண். 403HML52753350 & 403GHP61776223–ன்கீழ் 06.11.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.38,20,268/–(ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து இருபதாயிரத்து இருநூற்று அறுபத்தியெட்டு மட்டும்)** மற்றும் 07.11.2023 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையிலான பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை "எங்கு எப்படி உள்ளதோ அப்படியே" என்ற அடிப்படையில் **28.12.2023** நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பின் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.23,30,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து முப்பதாயிரம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.2,33,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்து மூன்றாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 27.12.2023 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: ப்ளாட் எண்.ஏ மற்றும் அதன் துண்டுகளும் அதன் பகுதிகளும், மனை எண்.16, ப்ளாட் எண்.எப்–2, முதல் தளம், கார்னர் பிளாட், வட கிழக்கில் உள்ளது. ''ஸ்ரீ சாய் ஹோம்ஸ்'', ஓம் சக்தி நகர், 28வது அவென்யூ, ஒரகடம், சென்னை – 600 056. விஸ்தீரணம் 724 சதுர அடி (பொதுப் பகுதியை உள்ளடக்கி உள்ளது) உடன் 2344 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் 363 சதுர அடியை உள்ளடக்கி உள்ளது. பழைய சர்வே எண்.87/5, பட்டா எண்.3409, பட்டாப்படி புதிய டிவிஷன் சர்வே எண்.87/5சி, அம்பத்தூர் டவுன் சர்வே களப்பதிவுப்படி, வார்டு ஏ, பிளாக் எண்.D, டி.எஸ்.எண்.56/1, ஒரகடம் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், எல்லைகள்: வடக்கில் : 24 அடி அகல சாலை, தெற்கில் : இமானுவேல் தோட்டம், கிழக்கில்: மனை எண். 15 மற்றும் இமானுவேல் தோட்டம், மேற்கில் : மனை எண்.17.

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. ஷியாம் நம்பூரி (+91 9677288418), திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங்க் http://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 24.11.2023 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்